# வஹாபிகள்

## தோற்றமும் வளர்ச்சியும்




*Arabia in* 1928 *and* 1934

*(Heavily dotted line represents frontier of King Ibn Saud).*

*பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்*

# வஹாபிகள்

# தோற்றமும் வளர்ச்சியும்

## *நபியவர்களின் காலத்தில் இருந்த நயவஞ்சகர்கள்*

*அரேபியாவில் நஜ்து மாகாணம், (இன்று அதன் பெயர் ரியாத்) அங்கு வசிப்பவர்களுக்கு நஜ்தியர் என்று பெயர்.*

*நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து இஸ்லாத்தைத் தழுவிய அந்த நஜ்து வாசிகளுக்கு அவர்களின் உள்ளத்தில் குடிக்கொண்டிருந்த பொறாமைக் குணம் சற்றும் மாறாமல் அது நாளுக்கு நாள் வளர்ந்துக்கொண்டே இருந்தது.*

*நபியவர்களின் சமூகம் வந்து உபதேசங்களைக் கேட்கும் இவர்கள் வெளியில் சென்றதும் அதற்கு நேர் மாற்றமான நச்சு வார்த்தைகளைப் பேசுவார்கள். குதர்க்க வாதம் புரிவார்கள். இரவெல்லாம் இஸ்லாத்துக்கு எதிராக சதியாலோசனை செய்துகொண்டு இருப்பார்கள். இதற்குக் காரணம் அந்தத் தீயவர்களின் உள்ளத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இருந்த பொறாமை. இவர்களின் நிலையைத் தெரிந்து கொண்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவர்களுக்கு உபதேச தோரணையிலும், கண்டித்தும் பல முறை சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார்கள். ஆனால் அது இந்தத் தீயவர்களுக்கு செவிடன்*

காதில் ஊதிய சங்கு போல் ஆனது. இவர்களை பற்றித்தான் அல்லாஹ் தனது அருள்மறையில் நயவஞ்சகர்கள் (முனாபிகீன்கள்) என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எச்சரிக்கை செய்து இருப்பதை திரு மறையின் பல இடங்களில் காணலாம். இவர்களின் போக்கு பற்றி நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு வேதனை ஏற்படுவதுண்டு.

ஷைத்தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வரும் போது இந்த நஜ்தியர்களின் உருவத்தில் தான் வருவான். அவனைக் கண்டதும் ஷெய்குன் நஜ்தி (நஜ்தி பெரியார்) வருகிறான் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறுவார்கள். இதைக் கேட்கும் ஸஹாபாக்கள் இவன் ஷைத்தான் என்று புரிந்து கொள்வார்கள். ஒரு சமயம் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தங்கள் முபாரக்கான கரங்களை ஏந்தி "யா அல்லாஹ்! எங்கள் ஷாம் (சிரியா) தேசத்துக்கு பரக்கத்து செய்வாயாக! யா அல்லாஹ்! எங்கள் யெமன் தேசத்திற்கும் பரக்கத்து செய்வாயாக!" என்று துஆ கேட்டார்கள்.

அப்பொழுது பக்கத்திலிருந்த நஜ்தியர்கள், "யா ரசூலல்லாஹ்! எங்களுடைய நஜ்து தேசத்துக்கும்" என்றார்கள். மறுமுறையும் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் கூறிய படியே ஷாம், யெமன் இரு தேசங்களுக்காகவும் துஆ செய்தார்கள். மீண்டும் நஜ்தியர்கள் தங்கள் தேசத்துக்காக துஆ கேட்கும் படி கூறவே, நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், "அங்கு தான் அதிர்ச்சிகளும், கொந்தளிப்புகளும், பித்னாக்களும் உண்டாகும். ஷைத்தானின் கொம்பு வெளியாகும். அங்குதான் ஷைத்தானுடைய கூட்டங்கள் வெளிக்கிளம்பும்" என்று கூறினார்கள். (ஸஹிஹ் புகாரி)

நஜ்தியர்களின் முனாபிக் (நயவஞ்சகச்) செயல்கள் காரணமாக அடிக்கடி பித்னாக்கள் வேகத்துடன் ஏற்படுவதும், அது பலம் இழப்பதுமாக வரலாற்றில் இடம்பெற்று வந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது மறைவின் 225 வருடங்களில் நஜ்தியர்களால் ஏற்படும் சிறு சிறு குழப்பங்கள் எல்லாம் அப்பொழுது வாழ்ந்த இஸ்லாமிய அறிஞர்களாலும் ஆட்சியாளர்களாலும் அப்போதைக்கப்போது அடக்கி ஒடுக்கப்பட்டன.

## இப்னு தைமியா

*இதன்பின்னர், இப்னு தைமியா என்பவர் தோன்றுகின்றார். இவர் இஸ்லாத்தில் குழப்பங்களை உண்டுபண்ணும் படியான செயற்பாடுகளில் இறங்குகின்றார். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஷரீஅத்திற்கு விரோதமான மஸாயீல்களை திரட்டி, "ஸிராத்தல் முஸ்தகீம்" என்ற நூலை வெளியிட்டு புதிய சர்ச்சையையும் கிளர்ச்சியையும் உருவாக்கினார். இந்த நூலில் அதிகமாக நபிகள் நாயகம் (ஸல்), அஹ்லுல் பைத்துகள், மதிப்புக்குரிய ஸஹாபாக்கள், இமாம்கள் முதலியோரை இழிவுச் சொற்களால் நிந்தித்து எழுதினார். இதை அவருடைய சகோதரர்களும், உறவினர்களும் கண்டித்தார்கள்.*

*அப்போது வாழ்ந்த தலை சிறந்த முஸ்லிம் அறிஞர்களான ஷெய்குல் இமாம் ஷைக் முஹம்மது ஃபர்ஸ் , குதுவதுல் முஹத்திதீன் ஷைக் இப்னு ஹஜர் மக்கி, செய்யத் அஹ்மத் கபீர் பாரியி இன்னும் மக்காவின் முப்தியா இருந்த அல்லாமா செய்யத் அஹ்மத் தஹ்லான் மக்கி ஆகிய மார்க்க மேதைகள் இந்த இப்னு தைமியாவை லஃனத்துச் செய்து காஃபிர் என்று மார்க்க தீர்ப்பு (ஃபத்வா) வெளியிட்டு இருக்கிறார்கள். ஆனாலும் இப்னு தைமியாவுடைய சூழ்ச்சியை அறியாமல் சில அறிவீனர்கள் அவரைப் பின்பற்றினார்கள். இவருடைய அட்டூழியம் பொறுக்க முடியாமல் எகிப்து அரசாங்கம் பல முறை இவரை சிறைக் காவலில் வைத்தது. அப்போதும் இவர் அடங்கவில்லை. இறுதியாக சிரியா அரசாங்கம் இவரைக் கைது செய்து திமிஷ்க் நகர சிறைக் கூடத்தில் அடைத்து வைத்தது. அங்கேயே அவர் மடிந்தார்.*

*இப்னு தைமியாவின் பிரதிநிதிகளில் பலர் காலப்போக்கில் ஃபித்னாக்கள் கிளர்ச்சிகள் செய்வதும் எதிர்ப்பின் காரணமாக கேவலப்பட்டு அது மறைவதுமாக இருந்தது.*

## முகம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப்

*அதிலிருந்து ஏறத்தாழ 600 வருடங்களுக்குப் பின் நஜ்தை சார்ந்த தர்இய்யா என்ற ஊரில் முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப்*

பிறந்தார். இவர் தலையெடுத்து இப்னு தைமியாவுடைய கொள்கைகளைப் பின்பற்றி அதற்கு ஊக்கமும், ஆக்கமும் கொடுத்து புதியதோர் மத்ஹபை உண்டாக்க முற்பட்டு இப்னு தைமியா எழுதிய ஸிராத்தல் முஸ்தகீம் என்ற நூலை விரிவு படுத்தி அதனை "கிதாபுத் தவ்ஹீத்" என்ற புதிய பெயரில் வெளியிட்டார். இவரது கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களே வஹ்ஹாபிகள் என அழைக்கப்படுகின்றனர்.

இந்த சந்தர்ப்பத்தில், துருக்கி அரசர் சுல்தான் அப்துல் ஹமீத் கான் காலமானார். பதவியின் காரணமாக அரசாங்கத்தில் பிளவு ஏற்பட்டது. துருக்கியின் உதவியைப் பெற்று கொண்டிருந்த பக்கத்து அரசர்களும் பலம் இழந்தார்கள். அது ஹிஜாஸையும் தாக்கியது. இதை தக்க தருணமாகக் கொண்டு முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தி ஒரு படையைத் திரட்டிகொண்டார். இந்தப் படையின் தலைவனாக சுஊத் என்பவனை நியமித்தார்.

**இப்னு சுஊத்**

அரேபியாவில் வழிப்பறிக் கொள்ளைக் கோஷ்டி ஒன்றின் தலைவனாக இருந்த முகம்மது இப்னு சுஊத் தலைமையில் வஹாபிகள் இராணுவ பலத்தை கட்டி அமைத்தனர். ஒரு சிறிய ஆயுதக் குழுவாக இருந்த இவனது படை, பின்னர் அதிக ஆட்பலமும் ஆயுத பலமும் கொண்ட படையாக மாற்றம் பெற்றது. இதற்கு அப்போதைய பிரித்தானிய அரசு முழு நிதி உதவியையும் வழங்கியது. ஆரம்பத்தில் சிறிய ஆயுதக் குழுவாக இருந்து, பின்னர் படை பலத்தை பெருக்கி, ரியாத், மதீனா போன்ற நகரங்களைக் கைப்பற்றி தமது ஆதிக்கத்தை நிலைநாட்டினார்கள் வஹாபிகள். அது தான் சவூதி அரேபியா என்ற நவீன தேசம் தோன்றிய கதை.

இந்த சுஊத் தனது பெரும் படையுடன் புனித மக்காவுக்குள் நுழைந்து பொருள்களை சூறையாடி ஆண், பெண், வயோதிபர்கள், வாலிபர்கள், குழந்தைகள் என்று பாராமல் முஸ்லிம்களைக் கொன்று குவித்தான். அந்த மக்காவாசிகள் உயிர் தப்புவதற்காக புகலிடம் தேடி கஃபாவின் ஹரம் ஷரீபுக்குள் நுழைந்தார்கள். அப்பொழுதும் அந்தக் கயவர்கள் அந்த முஸ்லிம்களை உயிரோடு விடவில்லை. கொன்று

குவித்தார்கள். ஞாபகார்த்தமான மஸ்ஜிதுகளும், கப்ருகளும் தாக்கப்பட்டன. மக்காவில் புரிந்த அட்டூழியம் போலவே மதீனா முனவ்வராவிலும் அந்தக் கயவர்கள் கொஞ்சமும் இரக்கமின்றி முஸ்லிம்களை எல்லாம் வெட்டி வீழ்த்தினார்கள். அப்போது அங்கு இருந்த செய்யதுனா அப்பாஸ் (ரலி), செய்யதுனா இப்னு அப்பாஸ் (ரலி), மற்றும் ஹஸ்ரத் பாத்திமா (ரலி) ஆகியோருடைய அடக்கஸ்தலங்களும் தகர்க்கப்பட்டன. ஸலவாத்து நூல்கள் ஃபிக்ஹூ கிதாபுகள் முதலியவை எரிக்கப்பட்டன. ஜித்தா, தாயிப், மக்கா, மதினா ஆகியவை இந்தக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டன.

இந்த அநியாயக்காரர்களின் அட்டூழியம் பெருகி கடைசியாக அவர்கள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கப்ரு ஷரீஃபையும் தரைமட்டமாக்க முற்பட்டபோது, அந்த அநியாயக்காரர்களில் சிலர் திடீரென அதிசயமாக செத்து மடிந்தார்கள். இதனால், நபிகளாரின் கப்றைத் தகர்க்கும் இவர்களது திட்டம் தடுக்கப்பட்டது. இவர்கள் இந்தளவுக்கு காட்டுமிராண்டித்தனமாக அப்பாவி மக்களைக் கொல்வதற்குக் காரணம் அங்கு வாழ்ந்த மக்கள் பாரம்பரிய முஸ்லிம்களாக அதாவது அஹ்லுஸ் சுன்னா மக்களாக இருந்தமையே. அஹ்லுஸ் சுன்னா மக்கள் அனைவரும் முஷ்ரிக்குகள், பித்அத்துக்காரர்கள் என்று முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தி கருதியிருந்தான்.

அந்த சமயம் உள்நாடு, வெளிநாடுகளிலுள்ள உலமாக்கள், முஃப்திகள் இந்த முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தியின் கொள்கை முற்று முழுதாக தவறு என்றும் அதை கடுமையாக ஆட்சேபித்தும் தக்க ஆதார சான்றுகளுடன் அவரை லஃனத்து செய்து குப்ஃபார் (இஸ்லாத்தை விட்டு அப்பாற்பட்டவர்) எனத் தீர்ப்புக்கூறி பல ஃபத்வா கிதாபுகள் வெளியிட்டனர்.

இறுதியாக இந்த முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தி, யெமன் நாட்டில் ஒரு தக்வாவுடைய சுன்னத் வல் ஜமாஅத் பெரியாரோடு தன் மத்ஹபை பற்றி தர்க்க வாதம் புரிந்து இறுதியில் படுதோல்வியடைந்து அங்கேயே அகால மரணம் ஆனார். (இவரது அதிர்ச்சிக்குரிய அகால

மரணம் பற்றிய விபரம் ஃபுதூஹாதுல் மகிய்யா என்ற நூலிலும் மஙானி கிதாபிலும் காணலாம்)

## சவூதி அரேபியா

இப்னு அப்துல் வஹாபின் மரணத்திற்கு முன்னரே அவர் தனது படைக்குத் தலைவனாக நியமித்த சூஊது என்பவன், அரேபியாவின் ஆட்சியைப் பிடித்தான். வெறும் அரேபியா என்ற நாட்டை தன் பெயரை முன்னாள் செருகி சஊதி அரேபியா என்று மாற்றினான். அவனுடைய பரம்பரையே இன்று வரை அரேபியாவை ஆட்சி செய்கிறது. அரேபியாவின் கொள்ளைக்காரனாக இருந்த சூஊத் என்பவனை அந்நாட்டின் ஆட்சியாளனாக மாற்றியதில் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் மட்டுமன்றி, பிரித்தானிய அரசும் முக்கிய பங்கைக் கொண்டிருந்தது. அதாவது, இஸ்லாமிய உலகை ஒட்டு மொத்தமாக ஆட்சி செய்து வந்த இஸ்லாமிய கிலாபத்தை வீழ்த்துவதற்கு, பிரித்தானியா பல வழிகளிலும் சதித் திட்டங்களைத் தீட்டி முயற்சித்து வந்தது. அதன் சதி வலைகளுக்கெல்லாம் பூரண ஒத்துழைப்பை வழங்கியவர்களே இந்த முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபும், அவரது படைத் தலைவனான சூஊதும்.

வஹ்ஹாபி மதப்பிரிவின் தலைவனாக மட்டுமல்ல, அரசுத் தலைவனாகவும் மாறிய இப்னு சூஊதின் பெயர் அந்தப் புதிய நாட்டிற்கு சூட்டப்பட்டது. முதலாம் உலக யுத்தத்தின் முடிவில், அந்தப் பிராந்தியத்திற்கு வருகை தந்த இராணுவ பலம் மிக்க அந்நியர்களான பிரிட்டிஷாருடன் சில உடன்படிக்கைகள் போடப்பட்டன.

சவூதி அரேபியாவில் மையம் கொண்ட வஹ்ஹாபிகள், பின்னர் பிற நாடுகளுக்கும் தமது மத அடிப்படைவாதப் புரட்சியை ஏற்றுமதி செய்ய விளைந்தனர். அளவு கடந்த எண்ணை வளம் அவர்களது கனவை நனவாக்கியது. ஜித்தாவில் இருக்கும் இஸ்லாமியப் பல்கலைக்கழகம் உலகெங்கும் இருந்து வரும் முஸ்லிம் மாணவர்களுக்கு இலவச மதக்கல்வி அளித்தது.

முஸ்லிம்கள் செறிவாக வாழும் நாடுகளில் வஹ்ஹாபிஸ சங்கம்

அமைக்க ஊக்குவிக்கப்பட்டது. சவூதி அரசின் நிதி உதவியில் புதிய பள்ளிகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இவற்றை விட பிற நாடுகளின் இஸ்லாமிய தீவிரவாத அமைப்புகளுக்கு பெருமளவு நிதி உதவி வழங்கப்பட்டது. ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகளை எதிர்த்துப் போரிட்ட முஜாகிதீன் குழுக்கள், மற்றும் பின் லாடன் போன்றோரின் கூலிப்படைகள் என்பன இவ்வாறு சவூதியின் நிதியுதவி பெற்ற குழுக்களில் குறிப்பிடத்தக்கவை. சூடானில் திடீர் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய துரபியின் மத அடிப்படைவாத அரசிற்கும் சவூதி அரேபியா பக்க பலமாக இருந்தது.

அண்மையில்தான் சவூதி அரேபியா தனது நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடியது. இந்த நூறாண்டுகளில் அங்குள்ள மன்னனின் சர்வாதிகாரம் பற்றி, மத அடிப்படைவாத பிற்போக்குத்தனம் பற்றி, கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படுவது பற்றி, பெண்ணடக்குமுறை பற்றி, சிறுபான்மை சமூகங்கள் மீதான வன்முறைகள் பற்றி – ஜனநாயகம் காக்கும் மேற்குலக நாடுகளாகட்டும், மனித உரிமை நிறுவனங்களாகட்டும் – எதுவும் பேசுவதில்லை. காரணம், சவூதிக்கு அமெரிக்காவும் இஸ்ரேலும் பக்க பலமாக இருக்கின்றன என்ற ஒரே காரணந்தான்.

இஸ்லாமிய வரலாற்றில் ஹிஜாஸ் என அறியப்பட்ட நாட்டைப் பல துண்டுகளாகச் சிதைத்து, பிரித்தானியர்களால் 1932ம் ஆண்டு உருவாக்கப்பட்ட நாடுதான் சவூதி அரேபியா.

முஸ்லிம்களின் ஒரே தலைமைத்துவமாக இருந்த, துருக்கியிலிருந்த உதுமானியப் பேரரசை வீழ்ச்சியுறச் செய்ய பிரித்தானியாவிற்கு ஒத்துழைத்ததற்கான நன்றிக் கடனாக பிரித்தானிய உளவு நிறுவனங்களினால் அன்றைய பாலைவனக் கொள்ளை கோஷ்டியின் தலைவனான, தற்போதைய அப்துல்லாஹ்வின் பாட்டனான இப்னு சுஊதுக்கு சவூதி என்ற பெயரில் இந்த நாடு லஞ்சமாக வழங்கப்பட்டது. மத்திய கிழக்கில் இஸ்லாத்தின் எதிரிகளால் புதிதாக உருவாக்கப்பட்ட சவூதி அரேபியாவும், இஸ்ரேலும் தன்னை உருவாக்கிய மேற்கு நாடுகளுக்கு இன்றுவரை மிகவும் விசுவாசமாக கருமமாற்றி வருகின்றன.

இவ்வாறு இஸ்லாமிய எதிர்ப்பு சக்தியான பிரித்தானிய அரசுக்கு ஆதரவாகவும் இஸ்லாமிய கிலாபத்துக்கு எதிராகவும் செயற்பட்டவன்தான் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது முன் அறிவிப்பின் படி, நஜ்தில் ஷைத்தானின் கொம்பாக தோன்றி ஃபித்னாக்களையும், குழப்பங்களையும் உருவாக்கியவன்தான் இந்த முஹம்மது இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தி.

முகம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாபைப் பின்பற்றி, இவரது மத்ஹபை ஏற்று, இவரது சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு தலைசாய்த்து நடப்பவர்களையே “வஹாபிகள்” என்று சொல்லப்படும்.

**வஹ்ஹாபிஸக் கொள்கை ஏற்றுமதி**

இஸ்லாத்துக்குள் குழப்பங்களை உண்டுபண்ணுவதற்கும் இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகளின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் என்றே உருவாக்கப்பட்ட இந்த வஹ்ஹாபிஸக் கொள்கை, சவூதியில் ஸ்திரதமடைந்ததன் பிற்பாடு, அண்டைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. குறிப்பாக இந்தியாவிலும், அதன் பின் இலங்கையிலும் அது இறக்குமதியானது. ஆரம்பத்தில், இங்கிருந்த அஹ்லுஸ் சுன்னா அறிஞர்கள், இந்தக் கொள்கையைக் கொண்டு வந்த வஹ்ஹாபிஸ ஏஜண்டுகளை அடித்து விரட்டினர். அஹ்லுஸ் சுன்னா அறிஞர்களுடன் தர்க்கிக்க முடியாமல் இந்த வஹ்ஹாபிகள் ஓட்டம் பிடித்தனர். “திரை கிழிந்தது, வஹ்ஹாபிகள் தப்பியோட்டம்” என்ற பெயரில் அஹ்லுஸ் சுன்னா அறிஞர்கள், வஹ்ஹாபிகளின் இந்தத் தோல்வியைக் கொண்டாடினர்.

சவூதியிலிருந்து பெருந் தொகைப் பணத்துடன், இறக்குமதி செய்யப்பட்ட வஹ்ஹாபிஸம், இலங்கையிலும் இந்தியாவிலும் போதிய வளர்ச்சியை எட்டாத நிலையைக் கண்ணுற்ற அக்கால சவூதித் தூதுவர்கள், வஹ்ஹாபிஸ ஏஜண்டுகளாக இருந்தவர்களை அழைத்து, கண்டித்ததுடன், தொடர்ந்தும் இப்படியே மௌனமாக இருந்தால், உங்களது சம்பளங்களை நிறுத்தி விடுவோம் என அச்சுறுத்தினர்.

எனவே, எதையாவது சொல்லி, சமூகத்துக்குள் குழப்பங்களையும் பித்னாக்களையும் உண்டு பண்ணிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற தேவையும் நிர்ப்பந்தமும் இந்த வஹ்ஹாபிஸ ஏஜண்டுகளுக்கு ஏற்பட்டது. அவர்கள் தாம் பெறுகின்ற சவூதி ரியால்களைத் தக்க வைத்துக் கொள்ளக் கடுமையாக உழைக்க வேண்டும் என்று உணர்ந்தார்கள். எனினும், வஹ்ஹாபிகள் என்ற தமது கோர முகத்தை மறைத்துக் கொள்ள அவர்களுக்குப் புதியதொரு அடையாளம் தேவைப்பட்டது. எனவே, முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் எழுதிய “கிதாபுத் தௌஹீத்” என்ற நூலிலுள்ள தௌஹீத் என்ற பெயரைத் தமது இயக்கத்திற்கெனச் சூட்டிக் கொண்டார்கள். தௌஹீத் ஜமாஅத் எனப் பெயர் பெற்றார்கள். அந்தப் பெயருடன் இந்திய மற்றும் இலங்கை சமூகங்களுக்குள் ஊடுருவினார்கள்.

அதன்பின், படிப்படியாக சமூகத்துக்குள் பிரச்சினைகளையும் பிளவுகளையும் உண்டுபண்ணினார்கள். சில்லறைப் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்தி, பொதுமக்களின் கவனத்தைச் சிதைத்தார்கள். சமூகத்துக்குள் மட்டுமன்றி, உறவுகளுக்குள், குடும்பத்துக்குள், நண்பர்களுக்குள் என எல்லாத் தரப்பிலும் விரிசல்களை உண்டாக்கினார்கள். பகைமையையும் விரோதத்தையும் குரோதத்தையும் இளைஞர்கள் மத்தியில் விதைத்தார்கள். இவர்களது இத்தகைய நாசகார சதித் திட்டங்களுக்கெல்லாம், சவூதியின் ரியால்கள் தாராளமாக இறைக்கப்பட்டன.

தமது உண்மையான சொரூபத்தை மறைத்துக் கொண்டு சில்லறைப் பிரச்சினைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னேறினார்கள். தம்மை நல்லவர்களாகக் காட்டிக் கொள்ள சமூக சேவைகள் சிலவற்றையும் இவர்கள் செய்தார்கள். எமது சகோதரர்கள் சிலர் இவற்றுக்கு துரதிர்ஷ்டவசமாக பலியாகிப் போனார்கள்.

இந்த வஹாபிஸ இயக்கத்தினர், புதுப் புதுப் பெயர்களைப் புனைந்து இந்தியாவிலும் இலங்கையிலும் இயக்கங்களைத் தோற்றுவித்துக் குழப்பங்களையும் பித்னாக்களையும் உண்டுபண்ணி வருகின்றனர். இவர்களின் சூழ்ச்சி தெரியாமல் அப்பாவி மக்கள் இவர்களின் மாயப்

பேச்சிலும் சில்லறைப் பணத்திலும் மயங்கி பெரும் பாவத்தில் வீழ்ந்து இருக்கிறார்கள்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "கடைசி காலத்தில் பொய்யர்களும், ஏமாற்றுக்காரர்களும் வருவார்கள். நீங்களும் உங்கள் மூதாதையரும் கேட்டிராத ஹதீஸ்களை எல்லாம் உங்களிடத்தில் ஓதிக் காட்டுவார்கள். முஸ்லிம்களே! நீங்கள் அவர்களை விட்டும் தூரமாகி இருங்கள். அவர்களை உங்களிடம் வரவிடாதீர்கள். அப்படி அவர்களைத் தூரமாக்கி விட்டால் அவர்கள் உங்களை வழி கெடுக்கவோ உங்களை பித்னாவில் ஆழ்த்தவோ முடியாது." (முஸ்லிம், மிஷ்காத்)

சமூகத்துக்குள் சின்னச் சின்னக் குழப்பங்களை உண்டுபண்ணிக் களைத்துப் போன இந்த வஹ்ஹாபிகள், தற்போது, சமூகத்துக்குள் இரத்தக் களறியையும், வன்முறைகளையும், கலவரங்களையும் உண்டுபண்ண முயற்சித்து வருகின்றனர்.

முஸ்லிம்கள் வேற்றுமைப்பட்டு பலவீனமடையவும், இஸ்லாத்தை உலகிலிருந்து முழுமையாக அகற்றி விடவும் அமெரிக்காவும் இஸ்ரேலும் சியோனிஸ்ட்டுகளும் போடும் சதித் திட்டங்கள் அனைத்தையும் அமுல்படுத்தும் கைக்கூலிகளாக இந்த வஹாபிகள் செயற்பட்டு வருகின்றனர். வஹாபிகளின் கால் பட்ட எந்த இடமும் அமைதியாக இருந்ததில்லை. ஈராக், சிரியா, ஆப்கானிஸ்தான், பஹ்ரைன், நைஜீரியா, தற்போது இந்தியா, இலங்கை…

இந்தப் பின்னணி தெரியாமல், வஹாபிகளது மேலோட்டமான சில செயல்களைக் கண்டு மயங்கி, இவர்களோடு இணைந்து செயற்பட முனையும் எமது சகோதர சகோதரிகளுக்கு, உடனடியாக இவர்களை விட்டும் தூரமாகி விடுமாறு நாம் உபதேசிக்கின்றோம். அதுவே இஸ்லாத்துக்கு நீங்கள் செய்யும் பெரும் உதவியாக அமையும்.

*வஹ்ஹாபிகளின் கொள்கைகள் சில*

**அல்லாஹ்வைப் பற்றிய வஹாபிகளின் நம்பிக்கை**

- அல்லாஹ் பொய் சொல்வது சாத்தியமாகும் (துக்வியதுல் ஈமான் பக்கம் 31)
- அல்லாஹ் பொய் சொல்வது அசம்பாவிதம் என்பதை நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம் (ஏக்ரோஜி பக்கம். 145)
- மனிதன் பொய் சொல்லுவான். மனிதனால் இயலுமானது அல்லாஹ்வாலும் இயலும். எனவே அல்லாஹ் பொய் சொல்லுவான் (ஏக்ரோஜி பக்கம் 144)
- அல்லாஹ் பொய்சொல்வது சாத்தியமானதுதான் என்ற மஸ்அலாவை இப்போது யாரும் புதிதாகச் சொல்லவில்லை. முன்னோர்களிடையே இதில் அபிப்பிராய பேதமுண்டு. (பறாஹீனே கரியா பக்கம் 03)
- மறைவான சங்கதிகளை விசாரித்துக் கொள்வது அல்லாஹ்வுடைய இஷ்டத்தை சேர்ந்ததாகும். எப்பொழுது விரும்புகிறானோ அப்பொழுது விசாரித்துக் கொள்வான். இது அல்லாஹ்வுடைய கருமமாகும் (துக்வியதுல் ஈமான் பக்கம் 16)
- அல்லாஹ்தஆலா இடம் காலத்தை விட்டும் பரிசுத்தமானவன் என்றும் கியாமத்து நாளில் திசைகளில்லாது பார்க்கப்படும் என்பது பித்அத்தாகும். ( ஈளாகுல் ஹக் பக்கம் 35)

**அண்ணல் நபி (ஸல்) அவர்களை பற்றி வஹாபிகள் கூறுவது:**

- வானம் பூமியிலுள்ள ஒருவரும் யாருக்கும் ஷபாஅத் செய்ய மாட்டார்கள் (துக்விய்யதுல் ஈமான் பக்கம் 05)
- ஒருவர் யாருக்கும் வக்கீலாகவோ காப்பாற்றக் கூடியவராகவோ ஆகியதில்லை (துக்வியதுல் ஈமான் பக்கம் 07)
- எவனாவது நபியை ஷபாஅத்துச் செய்யக் கூடியவர் என்று நம்புவானானால் அவன் அசல் முஷ்ரிக்காவும் மடையனாகவும் இருக்கும் (துக்வியதுல் ஈமான் பக்கம் 24

- ரசூல்லாஹ்வுக்கு தெரியக் கூடிய மறைவான சங்கதிகளைப் பற்றிய அறிவு (சாதாரண மனிதர்களான) ஸெய்துக்கும் அம்றுக்கும் சிறு மதலைகளுக்கும் பைத்தியக்காரனுக்கும் ஏன்? எல்லா ஜீவாராசிகளுக்கும் மிருகங்களுக்கும் கூடத்தான் தெரியும். (ஹிப்லுல் ஈமான் பக்கம் 06)

- ரசூல்லாஹ்வுக்கு விசால அறிவுண்டு என்பதற்கு என்ன ஆதாரம் உண்டு? இப்படி அவர்களுக்கு விசால அறிவுண்டு என்பதனால் எல்லா ஆதாரங்களையும் மறுத்து ஒரு ஷிர்க்கை திரிபுபடுத்துகின்றான். (பறாஹீனுல் காதியா பக்கம் 51)

- நபியுல்லாஹ் அவர்கள் மறைவான சங்கதிகளை அறிவார்கள் என்று நம்புவானானால் அவன் நிச்சயமாக காபிறும் முஷ்ரிக்கும் ஆகும். (பதாவா ரஷீதியா பக்கம் 37)

- றசூல் விரும்பினால் ஒன்றும் ஆகப்போகிறது இல்லை ( தக்வியதுல் ஈமான் பக்கம் 47)

- தொழுகையில் றசூல்லாஹவின் எண்ணம் வருவது மாடு கழுதையின் உருவத்தில் மூழ்குவதை விட எத்தனையோ மடங்கு கெட்டதாகும் (ஸிறாதுல் முஸ்தகீம் பக்கம் 97)

- யாறசூலுல்லாஹ் என்று பாமர மக்கள் சொல்வதை தடுக்க வேண்டும் (பதாவா இம்தியா பக்கம் 120)

- றசூல்லாஹ்வின் மறைவான சங்கதிகளை அல்லாஹ் அறிவித்து கொடுத்தான் என்று சொல்கிறார்களோ அது சுத்த பொய்யும் பைத்தியமும் ஆகும். (பதாவா ரசீதியா பக்கம் 73)

**மத்ஹப்கள் பற்றிய வஹாபிகளின் நம்பிக்கை**

- மத்ஹப்களையும் இமாம்களையும் பின்பற்றுவது வழிகேடும் நரகத்திற்கு இட்டுச் செல்லும் செயலுமாகும். அதிலும், குறிப்பிட்ட ஒரு மத்ஹபைப் பின்பற்றுவது மிகப் பெரும் வழிகேடாகும். உதாரணமாக, ஷாபி மத்ஹபை மட்டும் பின்பற்றுவது மிகப் பெரும் வழிகேடாகும். (பார்க்க: மத்ஹபைப் பின்பற்றுவது அவசியமா எனும் நூல்)

இவர்களது கொடூரமான உண்மை முகத்தை விளங்கிக் கொண்ட நாம், எதிர்காலங்களில் மிகவும் அவதானமாகச் செயற்பட வேண்டும். எமது ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் குலைத்து, எம்மைப் பலவீனப்படுத்த முனையும் இந்த சதிகாரக் கும்பலிடமிருந்து நாம் விலகியிருக்க வேண்டும். இவர்கள் நேர்வழி பெறப் பிரார்த்திப்போம். இல்லையெனில் இவர்களை அழித்து விடும்படி இறைவனை மன்றாடுவோம்.

நன்றி: தேடல் (www.thedal.lk)